கிடையில் தொழிலாளர்கள் 28-10-1986 அன்று காலையிலிருந்து உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இதைத் தொடர்ந்து நிர்வாகம் 30-10-1986 முதல் ஆலையில் கதவடைப்பை செய்துள்ளது.

திருநெல்வேலி, தொழிலாளர் துறை துணை ஆணையர் முன்பு நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் தொழிற்சங்கத் தரப்பில் குறைந்த பட்சம் சைமா (Southern India Millowners Association) ஒப்பந்தப்படி 8.33 சதவீதம் போனஸ் மற்றும் வருகை நாள் ஒன்றுக்கு ரூ. 1.10 பைசா வீதம் கருணைத் தொகையும் கோரப்பட்டது. ஆனால் நிர்வாகத்தரப்பில் 8.33 சதவீதத்துக்கு உரிய தொகையை போனஸ் முன்பணமாக வழங்குவதைத் தவிர்த்து, வேறு எந்தவிதச் சலுகையும் கொடுப்பது சாத்தியமில்லை என்று திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் திருநெல்வேலி தொழிலாளர் துறை துணை ஆணையர் முன்பு ஒரு முடிவு ஏற்படவில்லை.

எனவே இப்பிரச்சினையில் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காண சென்னை, தொழிலாளர் துறை இணை ஆணையர் (நிர்வாகம்) முன்பு தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடைபெற உள்ளது. வேலை நிறுத்தமும், கதவடைப்பும் தொடர்ந்து நீடிக்கிறது. நிலைமை அமைதியாக உள்ளது. அசம்பாவிதங்கள் ஏதும் நடைபெறவில்லை.

(ஈ). பேட்டை ஆரல்வாய்மொழி போன்ற இடங்களிலுள்ள கூட்டுறவு நூற்பாலைத் தொழிலாளர் வேலை நிறுத்தம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் ஜே. ஹேமச்சந்திரன், கோ. வீரய்யன், எம். செல்லமுத்து ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அறிக்கையை அளிப்பார்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

1. பேட்டையிலுள்ள தென்னிந்திய கூட்டுறவு நூற்பாலை போனஸ் பிரச்சினை.

திருநெல்வேலி பேட்டையிலுள்ள தென்னிந்திய கூட்டுறவு நூற்பாலையில் 'ஏ' ஆலை 'பி' ஆலை என்ற இரு ஆலைகள் உள்ளன. 'ஏ' ஆலையில் சுமார் 814 தொழிலாளர்களும், 'பி' ஆலையில் சுமார் 848 தொழிலாளர்களும் பணிபுரிகின்றனர். இந்த இரு பிரிவு ஆலைத் தொழிலாளர்கள் ஐ.என்.டி.யு.சி., ஏ.ஐ.டி.யு.சி., சி.ஐ.டி.யு, தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை, அண்ணா தொழிற் சங்க பேரவை மற்றும் இதர சுயேச்சையாக பல தொழிற்சங்கங்கள் செயல்படுகின்றன.

1985-ம் ஆண்டுக்கான போனஸ் பிரச்சனை மீது ஒரு தொழிற் தகராறு எழுப்பப்பட்டு அதில் தொழிலாளர் துறை இணை ஆணையர், (சமரசம்) முன்பு 29-10-1986 அன்று பேச்சு வார்த்தைகள் நடைபெற்றது. இப்பேச்சுவார்த்தைகளின் போது, நிர்வாகம் கோவையில் ஏற்பட்ட ஒப்பந்தப்படி 8.33 சதவீதம் போனசும், அதற்கு மேல் அதிகப்படித் தொகையாக வேலை செய்த நாள் ஒன்றுக்கு ரூ 1.35 வீதம் அளிக்க முன் வந்தது. ஆனால் தொழிலாளர்கள் தரப்பில் 20 சதவீதம் போனசும், அதிகப்படியாக வேலை செய்த நாள் ஒன்றுக்கு ரூ. 1.70—ம் மற்றும் ரூ. 2,000/- முன்பணமாகவும் அளிக்க கோரப் பட்டது. நிர்வாகம் இதை ஏற்கவில்லை. மேற்கொண்டு பேச்சு வார்த்தைகள் நிலுவையில் இருக்கும்போது தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கையை வலியுறுத்தி 30-10-1986 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதன் பிறகு அடுத்த கட்ட பேச்சு வார்த்தைகள் சென்னை தொழிலாளர் துறை தனித் துணை ஆணையர் முன்பு 5-11-1986, 6-11-1986 மற்றும் 7-11-1986 ஆகியநாட்களில் நடைபெற்றது. இந்த பேச்சு வார்த்தைகளின் போது தொழிற்சங்கங்கள் சேலம் கூட்டுறவு நூற்பாலையில் அளிக்கப்படுவது போல 14 சதவீதம் போனசும் மற்றும் இனாம் தொகையும் வழங்க வேண்டுமென்றும் அல்லது போனஸ் பிரச்சனையில் தீர்வு காணும் வரை முன்பணமாவது அளிக்க வேண்டும் என்று வற்புறுத்தினர். ஆனால் நிர்வாகம் சேலம் கூட்டுறவு நூற்பாலையைப் பொறுத்தவரை செட் ஆன் (Set-on) தொகை இருந்ததால் 14 சதவீதம் போனஸ் மற்றும் இனாம் தொகை வழங்கப்பட்டது என்றும், தங்களது நிறுவனத்தில் தற்போது ஒப்பந்தப்படி 8.33 சதவீதம் போனஸ் அளிக்கவும் மற்றும் ரூ. 1.35 எக்ஸ்கிரேஷியா அளிக்கவும் போனஸ் தொகை பற்றி இறுதியாக நிர்ணயம் செய்ய சம்பந்தப்பட்ட ஆவணங் களை தொழிலாளர் துறையின் முன்பு தாக்கல் செய்யவும் ஒப்புக்கொள்வதாக நிர்வாகம் தெரிவித்தது. ஆனால் முன்பணம் வழங்க நிர்வாகம் ஏற்கவில்லை. இந்நிலையில் மேற்கொண்டு பேச்சுவார்த்தைகள் ஒத்திவைக்கப்பட்டு தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் நீடிக்கிறது. பேச்சு வார்த்தைகளின் மூலம் இதில் தீர்வு காண எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப் படுகிறது.

2. ஆரல்வாய்மொழியிலுள்ள கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை போனஸ் பிரச்சனை.

ஆரல்வாய்மொழியிலுள்ள கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலையில் சுமார் 834 தொழிலாளர்கள் பணி புரிகின்றனர். இந்த ஆலையில் கன்னியாஸ்பின் ஒர்க்கர்ஸ் யூனியன் (சி. ஐ. டி. யு.), கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் (தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை) கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை ஜனதா தொழிலாளர் சங்கம் (சி.என்.டி.யு.சி.)

யுனைடெட் பிரண்ட் பெடரேஷன் (மதுரை) மற்றும் கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை அண்ணா தொழிற்சங்கம் ஆகியவைகள் இயங்குகின்றன. கன்னியாஸ்பின் தொழிலாளர் சங்கம் மற்றும் கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை தொழிலாளர் முன்னேற்றசங்கம் ஆகியவை 1985ம் ஆண்டுபோனஸ் பிரச்சனையை குறித்து 25-10-86 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக வேலை நிறுத்த அறிக்கை கொடுத்தனர். இத்தொழிற்தகராறில் நாகர்கோவிலிலுள்ள தொழிலாளர் துறை உதவி ஆணையர் (சமரசம்) முன்பு நடைபெற்ற பேச்சு வார்த்தைகளில் முன்னேற்றம் ஏதும் ஏற்படாததால் திருநெல்வேலி தொழிலாளர் துறை துணை ஆணையர் இதில் தலையிட்டு தற்போது பேச்சுவார்த்தைகள் மேற்கொண்டுள்ளார். இப்பேச்சு வார்த்தைகள் நிலுவையில் இருக்கும்போது தொழிலாளர்கள் போனஸ் கோரிக்கையை வலியுறுத்து 31-10-86 அன்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்தனர். 1-11-86 விடுமுறையாகிவிட்டது. எனவே 2-11-1986 அன்று தொழிலாளர்கள் வேலைக்கு திரும்பி மீண்டும் 3-11-1986 முதல் தொடர்ந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

திருநெல்வேலி தொழிலாளர் துறை துணை ஆணையர் முன்பு நடைபெற்ற முதல் சுற்று பேச்சுவார்த்தைகளின்போது தொழிலாளர்கள் தரப்பில் தற்போது 8.33 சதவீதம் போனசும் மற்றும் ரூ. 750/- முன்பணம் வழங்கி போனஸ் பேச்சு வார்த்தை முடிந்தபிறகு இத்தொகைகளை சரிசெய்து கொள்வது அல்லது 8.33 சதவீதம் போனஸ் மற்றும் வருகை நாள் ஒன்றுக்கு ரூ. 1-70 பைசா அதிகப்படி தொகையாகவும் கொடுக்க வேண்டுமென்று கோரப்பட்டது. நிர்வாகத் தரப்பில் ஒப்பந்தப்படி 8.33 சதவீதம் போனசும் மற்றும் வருகை நாள் ஒன்றுக்கு ரூ. 1.35 வீதம் அதிகப்படி தொகை வழங்க தயாராக உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. அதன் பிறகு நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் தொழிலாளர்கள் தரப்பில் ஒப்பந்த அடிப்படையை ஏற்றுக்கொள்வதற்கில்லை என்றும் ரூ. 1,750/- முன்பணமாக தொழிலாளர்களுக்கு அளித்து பேச்சு வார்த்தைக்குப்பின் அதனை சரிசெய்து கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. நிர்வாகத்தைப் பொறுத்தவரை சைமா (SIMA) ஒப்பந்தப்படி தான் போனஸ் மற்றும் அதிகப்படி தொகை வழங்கப்படும் என உறுதியாகத் தெரிவிக்கப்பட்டது. இருதரப்பினரும் தங்களது நிலையை வலியுறுத்தி வருவதால் ஒரு உடன்பாடும் ஏற்படவில்லை. வேலை நிறுத்தம் அமைதியாக நடைபெறுகிறது. இப்பிரச்சனையில் ஒரு சுமுகமான முடிவு காண மேற்கொண்டு பேச்சுவார்த்தைகள் திருநெல்வேலி தொழிலாளர் துறை துணை ஆணையர் முன்பு மேலும் தொடர்ந்து நடைபெறும்.

(2) திருச்சி சிம்கோ இன்ஜினியரிங் லிமிடெட் தொழிலாளர் பிரச்சனை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் ஜே. ஹேமச்சந்திரன், கோ. வீரய்யன், எம். செல்லமுத்து ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அறிக்கையை அளிப்பார்.

மாண்புமிகு திரு. கே. எ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

திருச்சிராப்பள்ளியிலுள்ள சிம்கோ இஞ்சினியரிங் லிமிடெட் என்ற நிறுவனத்தில் 1985-86ம் ஆண்டிற்கான போனஸ் பிரச்சினை தொடர்பாக 3—11—86 முதல் சில அசம்பாவித மான காரணங்களினால் பணி நிறுத்தி வைக்கப்பட்டது. பின்னர் தொழிலாளர் துறை சிறப்புத்துணை ஆணையர் அங்குள்ள நான்கு தொழிற் சங்கங்களுடனும்—1. சிம்கோ மீட்டர்ஸ் ஒர்க்கர்ஸ் யூனியன் (ஐ.என்.டி.யூ.சி) 2. சிம்கோ மீட்டர்ஸ் லேபர் யூனியன், (சி.ஐ.டி.யூ), 3. இஞ்சினியரிங் அண்ட் ஜெனரல் ஒர்க்ஸ் புராகிரசிவ் யூனியன் (டி.எம்.கே.) 4. சிம்கோ மீட்டர் ஸ்டாப் யூனியன் (சி.ஐ.டி.யூ.) மற்றும் நிர்வாகத்தினருடனும் 7.11.86 மற்றும் 10.11.86 ஆகிய தேதிகளில் நடத்தப்பட்ட பேச்சு வார்த்தைகளின் பயனாக ஒரு உடன்பாடு ஏற்பட்டது. அதன் அடிப்படையில் தொழிலாளர் துறை துணை ஆணையர் நிர்வாகத்தினருக்கும் தொழிற்சங்கங்களுக்கும் அறிவுரைகள் வழங்கியுள்ளார். அதன் பயனாக தொழிலாளர்கள் 14.10.86-க்கு முன்பாக இருந்த நிலைக்கு உற்பத்தியைக் கொண்டு வருதல் என்றும் எல்லா வகையிலும் நிறுவனத்தில் ஒழுங்கு முறைகளை காப்பதென்றும், நிர்வாகம் பணி நிறுத்தி வைப்பினை நீக்கி 12.11.86 முதல் நிறுவனத்தில் பணி மேற்கொள்ளப்பட வேண்டு மென்றும் முடிவு செய்யப்பட்டது. மேலும் 1985-86-க்கான போனஸ் மற்றும் தொழிற்சாலையை நிறுத்தி வைத்ததினால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளையும், 2 மாதத்திற்குள் தொழி லாளர் துறை தனித் துணை ஆணையர் முன்பு பேசி சுமுகமான முறையில் முடித்துக்கொள்வது என்றும் முடிவு எடுக்கப்பட்டது. இதனை இரு தரப்பினர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர். நிறுவனத்தில் தற்போது பிரச்சினை ஏதுமில்லை. 12.11.86 முதல் பணி தொடங்கப்பட்டு தொழிற்சாலையில் சகஜ நிலை திரும்பியுள்ளது.

(ஊ) கரும்புக்கு கட்டுபடியான விலை கோரி விவசாயிகள் உண்ணாவிரதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கே. சுப்பராயன் பொ. உத்திராபதி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அறிக்கையை அளிப்பார்.